## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்”

## 11.08.2025 முதல் 23.08.25 வரை நடைபெறும் இடங்கள்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,ஆக.10-

“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:



நாள் 11.8.25 திங்கட்கிழமை 173ஆம் நாள்

அம்பத்தூர் வடக்கு பகுதி

1) வட்டம் 85, காமராஜ புரம், வட்ட செயலாளர் த. கண்ணபிரான்

2) வட்டம் 86, அன்னை சத்யா நகர், வட்ட செயலாளர் M. கமல் M.C

நாள் 12.8.25 செவ்வாய் கிழமை 174 ஆம் நாள்

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 104, தங்கம் காலனி, அண்ணா நகர், வட்ட செயலாளர் சொ. முருகேசன்

2) வட்டம் 104 அ, சாந்தி காலனி, வட்ட செயலாளர் ப. லோகுபாபு

நாள் 13.8.25 புதன்கிழமை 175ஆம் நாள்

கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 68, 25 ஆவது தெரு, கட்ரோடு, ஜி.கே.எம் காலனி,

வட்ட செயலாளர், K.P. ஆதவன் மணி

2) வட்டம் 66 அ, வேணு கோபால் தெரு, வெற்றி நகர், வட்ட செயலாளர் P.ஊமைதுரை.

நாள் 14.8.25 வியாழக்கிழமை 176 ஆம் நாள்

திரு.வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 73, நியூ பேரன்ஸ் ரோடு, தாசமக் கான், வட்ட செயலாளர் எம். தமீம்

2) வட்டம் 73 அ, காந்தி நகர், புளியந்தோப்பு, வட்ட செயலாளர் பொல்லு (எ) டி.சுரேஷ்குமார்

நாள் 15.8.25 வெள்ளிக்கிழமை 177ஆம் நாள்

எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 77, காட்டூர், நல்ல முத்து தெரு, தட்டாங் குளம், வட்ட செயலாளர் தி.தயாளன்

2) வட்டம் 78, தானா தெரு, புரசைவாக்கம், வட்ட செயலாளர் சு. மனோகரன்

நாள் 16.8.25 சனிக்கிழமை 178 ஆம் நாள்

அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 93, பரணர் சாலை, மறைமலை அடிகற் சாலை சந்திப்பு,

முகப்பேர் கிழக்கு. வட்ட செயலாளர் இரா. டீக்கா

2) வட்டம் 90, பாடி புது நகர், ஏழாவது தெரு, வட்ட செயலாளர் நா. நெப்போலியன்

நாள் 17.8.25 ஞாயிற்றுக் கிழமை 179ஆம் நாள்

துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57 அ, ஆச் சாரப்பன் தெரு, தாதாமுத் தியப்பன்

தெரு சந்திப்பு வட்ட செயலாளர் பா. அண்ணாதுரை

2) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 55, ஏழு கிணறு, 55 ஆவது மாமன்ற

உறுப்பினர் அலுவலகம் அருகில், வட்ட செயலாளர் எஸ். சத்யநாராயணன்

நாள் 18.8.25 திங்கட்கிழமை 180 ஆம் நாள்

அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 83, விநாயகர் கோயில் அருகில், சிவலிங்க புரம், கொரட்டூர்.

வட்ட செயலாளர் சீ. லோகநாதன்

2) வட்டம் 83 அ, R.K லிங்க் சாலை, தாதம் குப்பம், வட்ட செயலாளர் சு. மோகன் குமார்

நாள் 19.8.25 செவ்வாய்க் கிழமை 181 ஆம் நாள்

கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 69 அ, S.R.P கோயில் தெரு, அகரம், காந்தி சிலை அருகில்.

வட்ட செயலாளர் P.அதிபதி

2) வட்டம் 66, பாலாஜி நகர் சந்திப்பு, வட்ட செயலாளர் N. ராமச்சந்திரன்

நாள் 20.8.25 புதன்கிழமை 182 ஆம் நாள்

திரு.வி.க நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 74, சந்தியப்பன் தெரு, ஆஷா நிவாஸ் அருகில், ஓட்டேரி.

வட்ட செயலாளர் எஸ் .புஷ்பராஜ்

2) வட்டம் 71 அ, B.S மூர்த்தி நகர், வட்ட செயலாளர் மா.ருத்ரமூர்த்தி

நாள் 21.8.25 வியாழக்கிழமை 183 ஆம் நாள்

துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57, தண்ணீர் தொட்டி, வால் டாக்ஸ் ரோடு,

வட்ட செயலாளர் ஜி. இராமமூர்த்தி

2) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 55அ, அம்மன் கோயில் தெரு,

கோவிந்தப்பா தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் எஸ். புகழேந்தி

நாள் 22.8.25 வெள்ளிக்கிழமை 184 ஆம் நாள்

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

1) வட்டம் 96, தாகூர் நகர் 1வது தெரு, வட்ட செயலாளர் எ.வேதா

2) வட்டம் 98ஆ, K.H.ரோடு, பாலவாயல் சாலை சந்திப்பு, வட்ட செயலாளர் காஞ்சி செ.துரை

நாள் 23.8.25 சனிக்கிழமை 185 ஆம் நாள்

எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு, விநாயகர் கோயில் அருகில்,

வட்ட செயலாளர் வான்மதி கதிரவன்.

2) வட்டம் 108அ , அம்பேத்கர் திடல், சேத்துப் பட்டு. வட்ட செயலாளர் L.சுந்தரராஜன் M.C

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர் பாபு அறிவித்துள்ளார்.



எழும்பூர் வடக்கு பகுதி 78(அ)வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு, அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி, தொகுதி பார்வையாளர் பி.எம்.யாழினி ஆகியோர் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 300 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினர்.நிகழ்ச்சி ஏற்பாடு 78(அ) வட்டக் கழக செயலாளர் நா.பாலு. இந்நிகழ்வில் எம்.தில்லை குமார், சூளை சுப்புராயலு, மு.முரளிதரன், எஸ்.நாராயணன், என்.மனோகரன், எம்.ராஜேந்திரன், வி.மோகன், வி.ஜான்சி, எஸ்.ராஜேந்திரன், சி.குணசேகரன், சி.தமிழ்ச்செல்வம், பா.பன்னீர்செல்வம், எம்.பாலாஜி, பா.லோகேஷ், பி.விஜயகுமார், மோகன்குமார், மேகலா, கே.நதியா, ஆர்.ராஜ்குமார், தினகரன், செல்வம் .விஜயகுமார், மதிவாணன், பெ.வெங்கடேசன், பிரேம்குமார், ஜி.கோபி, ஆர்.மோகன், மனோகரன், ரத்னவேலு, சிவகுமார், நரசிம்மன், தங்கராஜ், பன்னீர்செல்வம், எஸ்.ராஜேந்திரன், சந்தோஷ், மணி, சிவராஜ், ஜீவிதா, சரவணன், சினிவாசன், ராசலிங்கம், மனோஜ், மோகன்ராஜ், வினோத் உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.

---

### தலைமை ச.அற்புதராஜ் ! செ.யுவராஜ் ஏற்பாடு! எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.– தூத்துக்குடி எஸ்.ஜோயல் பங்கேற்பு!

# புழல் ஒன்றிய இளைஞரணி தி.மு.க. சார்பில் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் வேண்டுகோள் !

சென்னை,ஆக.10-

திராவிட மாடல் அரசின் நாயகன் தமிழக முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழக துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி. மதன்குமார் மற்றும் இ.பாஸ்கர், ஆர்.ஸ்டாலின், ஜே.முருகன், எம்.அண்ணாதுரை,ஆர். கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் தலைமை கழக பேச்சாளர் எஸ்.கே.ஸ்ரீராம் மற்றும் இளம் பேச்சாளர் கா. ஹேமநாதன் சிறப்புரையில் மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே. இனியன், புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ டேவிட் , யு.பிரேம்குமார், ஆர்.ஐயப்பன், ம.குறளரசன், அ.மணிமாறன், சே.அஸ்வின் வரவேற்பில் சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி திமுக சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காம் ஆண்டு திராவிட மாடல் அரசு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஏற்பாட்டில் இன்று (10.9.2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் புழல் ஒன்றியம் தீர்த்தங்கரையம்பட்டு ஊராட்சி திமுக அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாக கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் பல்வேறு மாவட்ட அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு,

# சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை,ஆக.10–

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியம் ஆகியவற்றின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமூடியகால்வாய் அமைக்கும் பணி, கால்வாய் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள், குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல், புதிய குளங்களில் நீர் கொள்ளளவினை அதிகரித்தல் மற்றும் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நேற்று (09.08.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





#### நீர்வளத்துறை

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தை தணிப்பதற்காக தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்து கடல் வரை நேரடியாக ரூபாய் 91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமூடிய கால்வாய் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு பக்கிங்காம் கால்வாயிலிருந்து கடல் வரை மேற்கொள்ளப்படும் நேரடி பெருமூடிய கால்வாய் அமைக்கும் பணியின் மூலம் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து வெளியேறும் வெள்ள நீர் அதிகரிப்பதுடன் சதுப்பு நிலத்தின் வெள்ள அளவான (+) 3.750 மீட்டரிலிருந்து (+) 3.000 மீட்டருக்கு குறைப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேலும், கடந்த காலங்களில் வேளச்சேரி விஜயநகர், ராம்நகர், பள்ளிக்கரணை, செம்மஞ்சேரி, நாராயணபுரம் மற்றும் பெரும்பாக்கம் பகுதிகளில் பெய்த மழைநீரால் ஏற்படும் வெள்ளப் பாதிப்பினால் மழைநீர் வடிய குறைந்தபட்சம் 2 அல்லது 3 நாட்கள் வரை ஆகும். தற்போது இத் திட்டம் செயல்பாட்டிற்கு வருவதால், தென்சென்னை பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு குறையும்.

இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம் மடுவில் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் விரிவான மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பள்ளிக்கரணை சதுப்புநிலம் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு திசைகளில் அமைந்துள்ள 62 குளங்களிலிருந்து தண்ணீரைப் பெறுகிறது. இது இறுதியில் ஒக்கியம் மடுவு வழியாக பக்கிங்காம் கால்வாயில் பாய்ந்து முட்டுக்காடு ஓடை வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தற்போது இந்த ஒக்கியம் மடுவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்வதுடன், நகர்ப்புற வெள்ளத்தைத் தடுக்க 800 மீட்டர் நீளத்தில் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பின்னர், பெருங்குடி மண்டலம், பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை ரூபாய் 57.70 கோடி மதிப்பீட்டில் மூடிய பெருவடிகால்கள் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இப்பணி மேற்கொள்ளப்படுவதனால், பள்ளிக்கரணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள செட்டிநாடு என்கிளேவ், ராஜேஷ் நகர், விடுதலை நகர் ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு தவிர்க்கப்படும்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை ரூ.44 கோடி மதிப்பீட்டில் இரண்டு கண் கொண்ட கூடுதல் பெரு வடிகால்வாய் அமைக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கு மற்றும் 2023ஆம் ஆண்டு மிக்ஜாம் புயலின் போது நாராயணபுரம் ஏரியின் வரையறுக்கப்படாத வடிகால்வாயினால் சுற்றுப்புற குடியிருப்புப் பகுதிகளில் பெரும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. இவ் வெள்ளப் பாதிப்பினைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரை மற்றும் திருப்புகழ் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை இரண்டு கண் கொண்ட கூடுதல் பெருமூடு வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுறும் தருவாயில், நாராயணபுரம், சுண்ணாம்பு குளத்தூர் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பள்ளிக்கரணை பகுதியில் அமைந்துள்ள ராம் நகர், ஸ்ரீநகர் மற்றும் எல்.ஐ.சி. நகர் பகுதிகள் வெள்ளப் பாதிப்பிலிருந்து தவிர்க்கப்படும்.

பின்னர், செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டத்தில் பக்கிங்காம் கால்வாயில் சேரும் கீழ்க்கட்டளை உபரி கால்வாயில் இரண்டு பகுதிகளாக ரூ.59.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இப்பணிகள் முடிவுறும் தருவாயில் கோவிலம்பாக்கம், சுண்ணாம்பு குளத்தூர், மடிப்பாக்கம் போன்ற அருகாமையிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளப்பாதிப்பிலிருந்து தவிர்க்கப்படும். இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கம் கால்வாயில் ரூ.9.40 கோடி மதிப்பீட்டில் தடுப்புச்சுவர், நுழைவுவாயில் ஈர்ப்புச்சுவர் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் போரூர் ஏரியின் வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு, உடனடியாக வெள்ளப் பாதிப்புகளை தவிர்க்க பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதன் அடிப்படையில், முதற்கட்டமாக 202223ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் வெள்ளப் பாதிப்பை தவிர்க்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த ஆண்டு போரூர் ஏரியின் மேற்பகுதியில் வெள்ளப் பாதிப்புகள் குறைக்கப்பட்டது. மேலும், கீழ்ப்பகுதியில் உள்ள கணேஷ் நகர், எம்.ஜி.ஆர். நகர், ராஜலட்சுமி நகர், திருவள்ளுவர் சாலை மற்றும் மாதா நகர் ஆகிய பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகின.

இக்கால்வாயில் தடுப்புச்சுவர், நுழைவாயில் ஈர்ப்புச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியால் மதனந்தபுரம், மணப்பாக்கம் மற்றும் முகலிவாக்கம் கிராமங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கப்படும்.

#### நெடுஞ்சாலைத்துறை

சோழிங்கநல்லூர் மண்டலம், மேடவாக்கம், கும்மிடியாண்டி தோப்பு சாலையில் நெடுஞ்சாலைகள் துறையின் சார்பில் ரூ.145 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட பாலம் கட்டும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் போக்குவரத்திற்கும் மக்களுக்கும் இடையூறின்றி பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளவும் உரிய காலத்தில் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு189 மற்றும் 193ல் 200 அடி ரேடியல் சாலையில் 17 கண் கொண்ட கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, அடையாறு மண்டலம், டைடல் பார்க் எதிரில் மத்திய கைலாஷ் முதல் மாமல்லபுரம் வரையிலான ஓ.எம்.ஆர். சாலையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகள் மேற்கொண்டு வருவதையொட்டி நடைபாதையின் 14 மீட்டர் அகலிருந்து 7.6 மீட்டர் அகலமாக குறைந்ததைத் தொடர்ந்து, அதன் அருகிலேயே 5 மீட்டர் வரை நடைபாலத்தினை அதிகரித்து அருகிலுள்ள தொழில் துறை நிறுவனத்தின் பகுதியில் அதன் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளவும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் முடிந்தவுடன் அதனை அவர்களிடம் ஒப்படைத்திடவும் அறிவுறுத்தினார்.

#### பெருநகர சென்னை மாநகராட்சி

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் உள்ள 42 ஏக்கர் பரப்பளவிலான ராமன் தாங்கல் ஏரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் வாயிலாக (Environmentalist Foundation of India), நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் ஆகாயத்தாமரை அகற்றுதல், பறவைகளுக்கான தீவுகள் அமைத்தல், 10,500 மரங்கள் நடுதல், சூரிய சக்தியில் இயங்கும் நீரூற்று, நடைபாதை, மின்விளக்கு வசதி, சுற்றிலும் வேலி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஏரி புனரமைப்பதன் மூலம் 22 சதவீத நீர் கொள்ளளவு அதிகரித்திடும். மேலும், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறைந்து பயனளித்திடும். இந்த குளத்தில் பசுமைப் பரப்பினை அதிகரித்திடவும், மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அடையாறு மண்டலம், கிண்டி ரேஸ் கோர்ஸ் கிளப் வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 4 குளங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக 4 குளங்கள் 1,10,800 கன மீட்டர் (அ) 3.91 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கும் திறனுடன் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த 4 குளங்களில் கூடுதலாக சேர்த்து 45,760 ச.மீ. பரப்பளவில், 2,28,800 கனமீட்டர் (அ) 8.07 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறனுடன் மழைநீர் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் மூலம் கிண்டி, மடுவின்கரை, வேளச்சேரி மற்றும் ஐந்து பர்லாங் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வெள்ளப் பாதிப்புகள் பெரிதும் குறையும்.

#### சென்னை குடிநீர் வாரியம்

முன்னதாக, அடையாறு கிரீன் வேஸ் சாலையில் சென்னை குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தலைமைச் செயலாளர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் ஆர்.செல்வராஜ், நீர்வளத்துறை செயலாளர் ஜெயகாந்தன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பாஸ்கர பாண்டியன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், துணை ஆணையர் (பணிகள்) சிவ கிருஷ்ண மூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் பொதுப்பணித் திலகம் உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---





முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள அங்கன்வாடி குழந்தைகளுக்கு தட்டு, டம்ளர் உள்ளிட்ட பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### செ.யுவராஜ் ஏற்பாட்டில், ச.அற்புதராஜ் தலைமை! ஆர்.டி.மதன்குமார் முன்னிலை!

# முத்தமிழறிஞர் கலைஞர் 7-வது நினைவுநாள்!

## தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் நல உதவிகள் வழங்கினர்!

சென்னை,ஆக.10-

முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள அங்கன்வாடி குழந்தைகளுக்கு தட்டு, டம்ளர் உள்ளிட்ட பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி நா.ஜெகதீசன், ஒன்றிய துணைச் செயலாளர் ஆர்.முருகன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி கமலக்கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.கே. இனியன், இ.பாஸ்கரன், ஆர். ஸ்டாலின், ஏ.கஜபதி, டில்லி ரமேஷ், ஜெ.முருகன்,பி. சுரேஷ், ஆர்.டி. தேவதாஸ், எஸ்.அந்தோணி, ஏ.விஜயன், தே.ரா அருண்குமார், ஏ.அபிமன்னன், ஜெ.கபிலன், இ.னசேகரன், ஜி.பிரிதிவிராஜ், என்.தேவானந்தன், ஏ.பிரேம்குமார், எம்.சேது, ஆர்.நெடுமாறன், ஜி.மருது பாண்டியன், வி. இளஞ்சேரன், சி. நித்தியானந்தம், ஏ.ஜோதி, எம்.விஜயகுமார், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நாவலன், அய்யப்பன், குறளரசன், அஸ்வின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் டி.கே.வினோத் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளை ஒட்டி அவருடைய திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஏழை எளியவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு துணை அமைப்பாளர் எச்.ஜெகன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சந்தோஷ், நா.ப.புகழரசு, தா.டோம்னிக், மணோஜ், தமிழ்மாறன்(எ) மனோஜ், ச.சதீஸ், டி.கே.சிவ சூரியா மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் ஆனந்தன், பிரபா, ஸ்ரீதர், சிவா, தண்டபானி, கோபால், விஜயராகவன், விஷ்ணு, தன்ராஜ், வெங்கட் கழக இளைஞரணி தோழர்கள் ரூபன், தீபக், ராஜேஷ், சாலமோன், சுதாகர், வெங்கட் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் என இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.